**கட்டுநாயக சீதுவ நகர சபை - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கட்டுநாயக சீதுவ நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 181(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கட்டுநாயக்க சீதுவ நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் மற்றும் காசுப்பாய்ச்சல் உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் 1.6.2 (உ) அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியமத்திற்கான விரிவான விளக்கம் அளித்தலின் பிரகாரம் EG 3.1 பந்தியின் பிரகாரம் நடைமுறை வேலை மூலதன வேலை காணப்படின் அவை ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் நடைமுறை வேலைகள் என தனியாக வகைப்படுத்தலின் கீழ் காட்டுவதற்கு பதிலாக ரூபா 116,469,612 தொகைக்கான நடைமுறை வேலை நீண்டகால பெற வேண்டியவைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | அடுத்த வருடம் முதல் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நியமத்திற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

#### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர சபைக்கு சொந்தமாக 13 அச்சு இயந்திரங்களின் பெறுமதியாகிய ரூபா 503,000 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | அடுத்த வருடம் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய இயந்திரங்களின் பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 2,540,878 தொகையாக இருக்க வேண்டிய போதிலும் ரூபா 2,527,378 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 13,500 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டில் அலுவலக உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,656,086 தொகை மிகையாகவும் மற்றும் தளபாட உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,656,086 தொகை குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | 2021 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நடைபெறு வேலையின் கீழ் மற்றும் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த மீளாய்வாண்டின் போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த 3 நிர்மாண வேலைகள் தொடர்பாக ரூபா 1,860,278 தொகை சீராக்கல் மேற்கொள்ளப்படாமையால் நடைபெறு வேலைக் கணக்கு மற்றும் கடன்கொடுத்தோர் கணக்கு அந்த தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | லியனகேமுள்ள அபிவிருத்தி பாதை சனசமூக நிலையம் ரூபா 8,000,000 தொகை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2020 ஆண்டின் போது அந்த கட்டிடத்தின் முதல் மாடியில் மதிப்பீட்டு பெறுமதியாகிய ரூபா 1,961,949 தொகை நடைபெறு வேலையின் கீழ் மற்றும் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்தல் சரிசெய்யப்பட்டிருக்காமையால் நடைபெறுவேலை கணக்கு மற்றும் கடன்கொடுத்தோர் கணக்கு அப் பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | - மேற்படி - |

**1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுபாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த குரன கடுநாயக்க சமகி மாவத்த காணியின் பெறுமதி ரூபா 12,376,472 தொகை எனினும் நிலையான சொத்துக்கள் அட்டவணையில் ரூபா 12,473,722 | நிலையான சொத்துக்கள் அட்டவணை மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடு சரிசெய்யப்பட்டு அடுத்த வருடம் சமர்ப்பிக்கப்படும் என. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகள் அல்லது அட்டவணைகளை சரிசெய்வதற்கு |

| | | |
|---|---|---|
| தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 97,250 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 177,782,346 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 193,042,302 தொகையாக இருந்தது.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொழிப்பு காசேட்டின் படி வங்கியில் காணப்படும் காசு மீதி ரூபா 19,257,107 தொகையாக காணப்பட வேண்டியிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அவை ரூபா 19,272,588 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 15,401 தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | சரி செய்தல் அடுத்த வருடம் மேற்கொள்ளப்படும் என. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீதவரி மற்றும் வரி | 153,675 | 156,364 | 149,987 | 56,245 | 152,565 | 153,032 | 131,048 | 49,868 |
| வாடகை | 8,550 | 11,939 | 12,031 | 882 | 9,600 | 11,072 | 8,425 | 6,176 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 5,321 | 4,965 | 4,965 | - | 5,001 | 3,163 | 3,163 | - |
| ஏனைய வருமானங்கள் | 118,025 | 133,233 | 129,081 | 18,763 | 110,583 | 94,701 | 95,669 | 17,094 |
| **மொத்தம்** | 285,571 | 306,501 | 296,064 | 75,890 | 277,749 | 261,968 | 238,305 | 73,138 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அலகு ஒன்றிலிருந்து அறவிடப்பட வேண்டிய வீதவரியின் பெறுமதி ரூபா 50,000 இனை மிகைத்துள்ள 95 அலகுகளிலிருந்து ரூபா 12,776,830 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிலுவைத் தொகைகளை அறவீடு செய்வதற்காக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நிலுவை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கைத்தொழில் வரி/ வியாபார வரி/ வர்த்தக அனுமதிப் பத்திரம் 2022 கணிப்பீட்டு அறிக்கையின் படி வியாபார அலகுகள் 1282 அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஒக்தோபர் 06 திகதியில் உள்ளவாறு 969 வியாபார அலகுகள் தொடர்பாக ரூபா 969,000 இற்கான சிட்டையிடல் மேற்கொண்டிருக்கவில்லை. | 810 அலகுகளுக்காக சிட்டையிடல் குறிப்பிட்ட கட்டணங்கள் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | சரியாக சிட்டையிடல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் சாட்டப்பட்டிருந்த கருமங்களை நிறைவேற்றல்

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நாளாந்தம் 26.5 இற்கும் 30.5 இற்கும் இடைப்பட்ட மெற்றிக் தொன்கள் கழிவுப் பொருள் எண்ணிக்கை ஒன்று திறந்த அப்புறப்படுத்தும் தரையில் முறைசாரா விதமாக குவிக்கப்பட்டு இருந்ததுடன் பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | அத்தியவசியமான சந்தர்ப்பங்களில் மண் போடப்படுகின்றது என அறிவிக்கப்படுவதுடன் நுளம்புகள் மற்றும் கொசுக்கள் பரவுவதை தவிர்ப்பதற்காக வாரத்திற்கு ஒரு முறை கிருமிநாசினி தொழிக்கப்படுவதுடன் மற்றும் புகை பிடித்தல் மேற்கொள்ளப்படுகின்றது.<br>குப்பைக் காணி மற்றும் கடலேரி இடையே 100 அடி இயற்கை மர மறைப்பு ஒன்று அமைந்துள்ளமையால் சேதம் ஒன்று ஏற்படவில்லை என. | சுற்றாடல் மாசடைதல் மற்றும் பொதுச் சுகாதாரம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கொன்று தயாரித்திருக்கவில்லை. | 2023 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும் என. | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பண்ட கணிப்பீட்டு அறிக்கையின் படி சபைக்கு சொந்தமான காணிகள் என இனங்கண்டிருந்த 27 காணிகள் தொடர்பாக காணி உறுதிகள் அல்லது நில அளவைப் படங்கள் காணப்படவில்லை. | குறிப்பிட்ட காணிகளுக்கு வெளியீட்டு காணி உறுதிகள் தயாரிப்பதற்காக இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | வரைபுகள் தயாரித்து காணி உறுதிகள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2019 ஆண்டு முதல் காணப்படும் ஆதனக் கடன் வட்டி ரூபா 77,977 தொகையினை மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அடுத்த ஆண்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுகப்படும் என. | வட்டியை மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2016 ஆண்டுக்கு முன்னர் இருந்து காணப்படும் ரூபா 61,870 இற்கான மதிப்பளிக்கப்படாத காசோலை மீதியை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அடுத்த வருடம் இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மதிப்பளிக்கப்படாத காசோலைகளை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2015, 2016, 2017 மற்றும் 2020 ஆண்டுகள் தொடர்பாக கடான பிரதேச செயலாளரிடம் பெற வேண்டிய ரூபா 1,267,457 இற்கான தொகை கணக்காய்வுத் திகதியாகிய 2023 ஏப்ரல் 24 திகதியளவிலும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவீடு செய்யப்பட வேண்டிய தொகையில் ரூபா 305,387.70 இற்கான தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன் மீதித் தொகையை அடுத்த ஆண்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெற வேண்டிய தொகைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2020 ஆண்டு முதல் காணப்படுகின்ற ரூபா 1,677,409 இற்கான பெற வேண்டிய மிகை விதிப்பு மீதி அறவிடப்பட வேண்டிய தரப்பினரை இனங்கண்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தண்டப் பணம் எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | -மேற்படி- |
| (எ) | 2019 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படும் செலுத்த வேண்டிய ரூபா 1,008,710 இற்கான கடன்வட்டி பெறுமதியினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அடுத்த வருடம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | செலுத்த வேண்டிய கடன் வட்டியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | சபையினால் பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனம் ஒன்றின் உரிமை 2023 ஏப்ரல் 20 திகதி கணக்காய்வுத் திகதியளவிலும் நகர சபைக்கு உரித்தாக்கியிருக்கவில்லை. | அடுத்த வருடம் இந்த வாகனத்தின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வாகனத்தை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | ரூபா 481,670,750 தொகை பெறுமதியான கட்டிடங்கள் மற்றும் பொறித்தொகுதிகளுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் சென்றிருக்கவில்லை. | பதிவேடு தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |
| (ஒ) | ஒரு பிணம் எரிப்பதற்கு செலவிடப்படும் எரிவாயு எண்ணிக்கை தொடர்பாக அறிக்கை ஒன்று பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒரு பிணம் எரிப்பதற்காக செலவிடப்படும் எரிவாயு எண்ணிக்கை தொடர்பான அறிக்கை ஒன்று எதிர்காலத்தில் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் என. | சரியாக அறிக்கைகள் பேணிச் செல்ல வேண்டும். |

**3.3 செயற்பாட்டுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 03 காணிகள் சாட்டுதல் கடிதத்தின் மூலம் உரித்தாக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக காணி உறுதிகள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போதைய அரசாங்க காணிகள் உரிய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உரித்தாக்கும் வேலைத் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு இருந்ததுடன், அந்த வேலைத் திட்டத்திற்கு 2 காணிகளும் உட்படுத்தப்பட்டுள்ளது எனவும் மீனவர் சனசமூக நிலையம் அமைந்துள்ள காணி வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் சாட்டுதல் செய்யப்பட்ட காணி ஒன்றாகும். | வெளியீட்டு காணி உறுதி பெற்றுக் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 1 ஏக்கர் 28.76 பர்சஸ் அளவான 07 காணிகள் தொடர்பான சிக்கலற்ற மற்றும் முறையான காணி நிலஅளவைப் படங்கள் (plan) காணப்படவலில | 7 ஏக்கர் 1 ரூட் 12.25 பர்சஸ் என குறிப்பிடப்பட்டுள்ள காணி உறுதி சில செயற்திட்டங்களுக்காக திட்டமிடப்பட்டிருந்த காணி உறுதியாக காணப்பட்டதுடன், அதற்கான இலக்கம் ஒன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. | சிக்கலற்ற மற்றும் முறையான நில அளவைப் படங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | லியனகேமுள்ள தகனகூடம் மற்றும் பண்டராவத்த மயானம், கும்பவீடு ஆகிய கட்டிடங்கள் முறையே ரூபா 10,000,000 மற்றும் ரூபா 2,500,000 தொகைக்கான பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இந்த கட்டிடங்களை கொண்ட காணிகளுக்கு காணி உறுதிகள், நிலஅளவைப் படங்கள் (plan) போன்ற சட்ட ரீதியான ஆவணங்கள் ஏதும் சபையில் காணப்படவில்லை. | இதற்காக வெளியீட்டு காணி உறுதிகள் தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | வெளியீட்டு காணி உறுதி பெற்றுக் கொண்டு உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ரூபா 74,000,000 பெறுமதியான 05 கட்டிடங்கள் சபையின் சொத்துக்கள் என கணித்து கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த கட்டிடங்களுக்காக சட்டரீதியான உரிமையை தீர்த்துக் கொண்டிருக்கவில்லை. | அரசாங்க காணிகளை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்குவதற்கான வேலைத் திட்டத்தின் கீழ் இந்த 5 கட்டிடங்களுக்கு உரிய காணிகளும் அடங்கியுள்ளன என. | கட்டிடங்களுக்காக சட்ட ரீதியான உரித்துக்களை தீர்த்துக் கொண்டு உரிமையை உறுதிப்படுத்த வேண்டும். |
| (உ) | 1945 ஜனவரி 12 திகதிய 9354 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த காணிப் பகுதியில் தலைமை அலுவலகம், விளையாட்டுத் திடலில் ஒரு பகுதி மற்றும் ஏனைய சில கட்டிடங்களும் அடங்குகின்றன. பின்னர் 2 ரூட்கள் 31.75 பர்சஸ் காணிப் பகுதியொன்று சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்ததுடன், தயாரிக்கப்பட்டிருந்த காணி உறுதியில் 7 ஏக்கர் 8.25 பர்சஸ் என குறிப்பிடப்பட்டிருந்தது என உறுதிப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| I | சொத்துக்கள் பதிவேட்டின் படி சபைக்கு சொந்தமாக இருந்த காணியின் அளவு 7 ஏக்கர்கள் 23 பர்சஸ் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 4820 இலக்கங் கொண்ட நில அளைவப் படத்தின் படி அந்த காணியின் அளவு 1 ரூட் 16.5 பர்சஸ் என குறிப்பிடப்பட்டிருந்தமையால் சபைக்கு சொந்தமான காணியின் எண்ணிக்கையை உறுதிப்படுத்தும் காணி நில அளவைப் படம் காணப்படவில்லை. | நகர சபை காணியில் 1 ரூட் 4.25 பர்சஸ் இற்கான எண்ணிக்கை ஒன்று சபை இழந்திருக்கவில்லை என. | சபைக்கு சொந்தமான காணி எண்ணிக்கையை உறுதிப்படுத்த வேண்டும். |
| II | 7 ஏக்கர் 8.25 பர்சஸ் என காட்டப்பட்டுள்ள நில அளவைப் படத்தில் மேற்கு எல்லையில் 30.5 பர்சஸ் இற்கான அளவு ஒன்று லொட் இலக்கம் 2 என காட்டப்படுகின்ற வீடமைப்பு திட்டத்தின் நிரந்தர வீடுகள் சபையின் ஆதனங்கள் என இனங்கண்டிருக்காததுடன் வெளித்தரப்பினர் 4 பேர்களினால் நிரந்தர வீடுகள் என அனுபவிக்கப்படுகின்றது என 2022 ஒக்தோபர் 26 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது. | குறிப்பிட்ட 4 வாடகை வீடுகளுக்காக வாடகை பெறுமதி மதிப்பீடொன்று பெற்றுக் கொள்வதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பபட்டுள்ளது என. | அங்கீகாரமற்ற வதிவுகளை தடுப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட 27 திகதி ரூபா 33,500,000 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த கொமட்சு இனத்தை சேர்ந்த (D 39 PX-22) D 5 D திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக பயன்படுத்தப்படும் இயந்திரம் 2022 செப்தெம்பர் 30 திகதியளவிலும் மூடப்படாத நிலையில் குப்பை செயற்களத்திற்கு அண்மையில் வைக்கப்பட்டு இருந்தது என பௌதீக ரீதியாக அவதானிக்கப்பட்டது. | இந்த இயந்திரத்தை வைப்பதற்காக மறைப்பு ஒன்று தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அது இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றது என. | இவ்வாறான இயந்திரங்கள் சாத்தியக்கூற்று ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு கொள்வனவு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் இயந்திரத்தை இயக்குவதற்காக இயந்திர இயக்குனர் ஒருவர் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |